


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



## THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 3 ஆகஸ்ட்டு 2003 கனி 9

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழ் தேவைப்படுவோர் கவனிக்க

உங்களுக்கு மாத இதழ் தேவைப்பட்டால் இன்றே ஒரு அஞ்சல் அட்டையில் கீழ் உள்ள மாதிரிபடி எழுதி அனுப்பவும்.

**A.** நீங்கள் எந்த திருசபைக்கு செல்லுகிறீர்கள் அல்லது நீங்கள் புறமார்க்கத்தாரா?

**B.** குடும்பத்தில் உள்ள மொத்தம் நபர்கள் போன்ற விபரத்துடனும் முகவரியை ஆங்கிலத்தில் மாவட்டம், பின்கோடு, போன்றவற்றுடன் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும்.

### உறுதிமொழி

1. நான் முகவரி மாறும்போது புதிய முகவரியை உடன் தெரியப்படுத்துவேன்.
2. உங்களோடு கடித தொடர்பு கொள்ளும்போது தாங்கள் எனக்கு கொடுக்கும் Ref.No.யை எழுதி தொடர்பு கொள்வேன்.
3. தினமும் பத்திரிகை வளர்ச்சிக்காக ஜெபிப்பேன் மற்றவர்களுக்கு அறிமுகம் செய்வேன்.

My Address                                        அன்புடன்

____________________

____________________

____________________          தேதி :          போன் :

## ஜெபங்கள்

★ நாட்டில் தண்ணீர் பஞ்சம் தீர...

★ மீஞ்சூரில் நடைபெற்ற 11வது வாசகர் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்காக ...

★ கர்த்தருடைய பணியை செய்து வரும் அனைத்து தாசர்களுக்காக...



## பொது அறிவுக்களஞ்சியம்

### பஞ்ச சீலம்

உலகில் அமைதி நிலவ நேரு அவர்கள் அளித்த ஐந்து முக்கியக் கொள்கைகள். அவை பிற நாட்டின் சுதந்தரத்தை மதித்து நடத்தல், ஆக்கிரமிப்பின்மை, பிற நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடாதிருத்தல், சம உரிமையும் ஒருவருக்கொருவர் பயனுள்ளதாக இருத்தலும் சமாதானத்தில் கூடி வாழ்தல்.

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 3 ஆகஸ்ட்டு 2003 கனி 9

ஆசிரியருரை

# யேகோவாயீரே
# Jehovahjireh



விசுவாச மார்க்கத்தாரின் தகப்பனாகிய ஆபிரகாமை நாம் நன்கு அறிவோம். அவன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தன் நேசகுமாரனாகிய ஈசாக்கை மோரியாதேசத்திலுள்ள மலைகளில் ஒன்றில் தகனபலியாகப் பலியிடும்படி தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டு மூன்றாம் நாளிலே தேவன் தனக்குக் குறித்த இடத்தை தூரத்திலே கண்டு ஆபிரகாம் தன் வேலைக் காரரை நோக்கி : நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம் மட்டும் போய், தொழுது கொண்டு, உங்களிடத்திற்குத் திரும்பி வருவேன் என்று சொல்லாமல் விசுவாசத்துடன் திரும்பி வருவோம் என்றான். பின்பு தகனபலிக்கு வேண்டிய கட்டைகளை எடுத்து ஈசாக்கின் மேல் வைத்து தன் கையிலே நெருப்பையும், கத்தியையும் எடுத்துக் கொண்டு இருவரும் போனார்கள். அப்பொழுது ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான். " அதற்கு ஆபிரகாம் : என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான்." (ஆதி. 22 :7). தகனபலிக்கான ஆடு தன் மகன் என்பதை அறிந்த ஆபிரகாம் அதை அவனிடம் சொல்லாமல் தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான். தேவன் ஆபிரகாமுக்கு சொல்லி இருந்த இடத்திற்கு இருவரும் வந்தடைந்தார்கள். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கை கட்டி, பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின் மேல் அவனை கிடத்தி பின்பு தன் குமாரனை வெட்டும் படி தன் கையை நீட்டி கத்தியை

எடுத்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டு பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்த படியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

பின்பு ஆபிரகாம் புதரிலே தன் கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக் கடாவைக் கண்டு, அதை பிடித்து தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியாக செலுத்தினான். அந்த விசுவாசத்தினாலே "அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டான்" (எபி. 11: 19) "ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக் கொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது" (ஆதி. 22 : 14) தன் மகன் ஈசாக்கு கேட்ட கேள்விக்கு ஆபிரகாம் சொன்ன பதிலை கவனித்தீர்களா! தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக் குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான். அந்தப் படியே நடந்தேறியது ஆகையால் இந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பெயரிட்டான்.

தேவன் தனக்கு சொன்ன படியே ஆபிரகாம் செய்த படியினால், கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு: நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல், அவனை ஒப்புக் கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும், ஆசீர்வதிக்கப்படும் என்றும் என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

இந்த விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்கள் அதிகம் உண்டு. அதில் குறிப்பாக இரண்டு காரியங்களை நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஒன்று : தேவனுக்குப் பயப்படுகிற பயம். இன்றைய சமுதாயத்தில் தேவனுக்கு பயப்படுகிற பயமில்லை. தேவன் பாரார், தேவன் கவனியார்என்ற சொல் நம் அனுதின வாழ்வில் நம் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. வேதம் "காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ?" (சங்.94 : 9) என்று கேட்கிறது. கண்ணை உண்டாக்கின தேவன் ஆபிரகாமுடைய விசுவாசத்தைக் கண்டார். நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று தேவதூதனால் சொல்லக் கேட்டான். பிரியமான சகோதரனே, சகோதரியே உன்னை தெரிந்தெடுத்த அந்த தேவனுடைய

கட்டளையை இன்று நீ நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாயா? அல்லது தேவன் தனக்கு என்ன செய்தார் என்று சொல்லி அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறாயா? ஆபிரகாமுக்கு ஈசாக்கை கொடுத்த தேவன் உங்களுக்கும் பிள்ளைகளை கொடுத்திருக்கிறார் அந்த பிள்ளைகளை சபையின் ஊழியத்தில் நீங்கள் பயிற்றுவிக்கிறீர்களா? நம்மில் எத்தனைபேர் "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்.16:15) என்ற ஆண்டவர் இயேசுவின் கட்டளைக்கு நம்மை அர்ப்பணித்திருக்கிறோம் அல்லது நம்முடைய பிள்ளைகளையும் உடமைகளையும் ஒப்புக் கொடுத்திருக்கிறோம். ஆபிரகாம் தன் பிள்ளையை தகனபலியாக கர்த்தர் கேட்கும் போது ஐயோ! ஒரே மகனை இப்படி கேட்கிறீரே ஆண்டவரே என்று ஓலமிட்டானா? நாமோ நம் பிள்ளை படித்து நல்ல நிலைமைக்கு வரவேண்டும், நல்ல இடத்தில் திருமணம் செய்ய வேண்டும் என்று ஆவல் கொள்கின்றோம். முதல் நூற்றாண்டு காலத்தில் தங்கள் ஆஸ்திகளால் ஆண்டவருக்கு ஊழியஞ் செய்து கொண்டு வந்த ஸ்திரீகளைக் குறித்து (லூக். 8: 3) ல் வாசிக்கின்றோம். அப்போஸ்தலர்களில் அநேகர் தங்கள் குடும்பத்தையும், வீட்டையும், வேலைகளையும் விட்டு இயேசுவின் பின்னே வந்தார்கள். இவர்களெல்லாம் தேவனுக்குப் பயந்து கர்த்தர் வல்லவர் என்றும் அவருக்கு பணி செய்வது ஒரு பெரும் பாக்கியம் என்றும் கருதி தங்களுக்கு கிடைத்த சமயத்தை பயன்படுத்திக் கொண்டார்கள். நாமும் தேவனுக்குப் பயந்து அவர் கட்டளைகளை நிறைவேற்ற பிரயாசப்படுவோம் "கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் ஆசீர்வதிப்பார்" (சங். 115 : 13).

இரண்டு : கீழ்ப்படிதல் "கர்த்தர் ஆபிரகாமை நோக்கி நீ உன் தேசத்தையும், இனத்தையும் , உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" என்றார். (ஆதி. 12 : 1). அந்தப் படியே அவன் கீழ்ப்படிந்து ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கும் போதும், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும் போதும், தேவனை நம்பி எல்லாவற்றையும் விட்டு புறப்பட்டுப் போனான். நம்மில் அநேகர் உறவை விடமுடியவில்லை, சொத்தை விட முடியவில்லை, இன்னும் அநேக சம்பத்தை விட முடியவில்லை காரணம் அந்த அளவிற்கு உலகத்தால் ஈர்க்கப்பட்டு அதற்கு அடிமையாகி உள்ளனர். அப்படியும் மீறி சுவிசேஷம் அறிவிக்க ஒருவர் வந்தால் என்ன கொடுப்பீர்கள், வீடு கொடுப்பீர்களா? வாகனம் வாங்கித் தருவீர்களா? அங்குள்ள ஜனங்கள் எப்படி? தண்ணீர் வசதி எப்படி? ஜீவனம் பண்ணுவதற்கு ஏற்ற இடமா அங்கே சுவிசேஷத்தை கேட்பார்களா? குறிப்பாக மருத்துவ வசதி உள்ளதா? இப்படி அநேக கேள்விகளை கேட்பார்கள். இது கீழ்ப்படிதலா? ஒப்புக் கொடுத்தலா? ஆபிரகாமை கர்த்தர் அழைக்கும் போது இதையெல்லாம் கேட்டானா? பிரியமானவர்களே சற்று நாம் சிந்திக்க வேண்டும் "தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக் கடவன்" (1 கொ. 7: 17, 20) என்ற வசனத்தின் படி அழைக்கப்பட்ட அழைப்பை உறுதியாக பற்றிக் கொண்டு செயல்பட வேண்டும். இதில் பொறாமைக்கு

இடம் கொடாதிருக்க வேண்டும். அவனுக்கு அதிகம் கொடுக்கப்படுகிறதே இவனுக்கு குறைவாக இருக்கிறதே என்ற கவலை தேவையற்ற ஒன்று.

நமக்குத் தெரிந்தபடி இஸ்ரவேலரின் வனாந்தர பயணத்தின் போது தேவன் எல்லோருக்கும் மன்னாவைக் கொடுத்தார். அதை சிலர் மிகுதியாகவும், சிலர் கொஞ்சமாகவும் சேர்த்தார்கள் பின்பு அதை ஓமரால் அளந்தார்கள், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மிகுதியானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதும் இல்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத் தக்கதாகச் சேர்த்தார்கள். இதிலே மோசேயின் சொல் கேளாமல் விடியற்காலமட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள். அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது. இன்றும் இப்படித்தான் நடக்கிறது. சுவிசேஷத்தை அறிவிக்கிறேன் என்று சொல்லி சுகபோகமாக சேர்க்கிறவர்கள் அதை அனுபவிக்காது கடந்து போகிறார்கள். ஆகையால் பிரியமானவர்களே "மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" (1 கொ.9 : 27) என்ற பவுலின் கூற்றுப்படி நம்மை நாமே தாழ்த்தி கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவோம் அப்படி கீழ்ப்படிந்தபடியாலே ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டான்.

ஆபிரகாம் வாழ்ந்த காலம் வேறு நாம் வாழும் காலம் வேறு என்று அநேகர் நினைக்கக் கூடும். காலங்கள் ஒருவேளை நம்மைப் பிரிக்கலாம். ஆனால் விசுவாசம் என்பது ஒன்றே, அன்றும் விசுவாசம் தான் இன்றும் விசுவாசம் தான். முற்பிதாக்களின் விசுவாசத்தை இன்றும் நாம் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு நம்பிக்கை மிக அவசியம் "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபி.11 : 1). ஒன்றுமே இல்லாதிருந்து நாம் தேவனை விசுவாசிக்கும் போது நம்மைப் பார்த்து அநேகர் ஏளனம் செய்யக் கூடும். இயேசுவையுங் கூட சிலர் ஏளனம் செய்தார்கள். "மற்றவர்களை ரட்சித்தான் ; தன்னைத் தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும் அப்பொழுது இவனை விசுவாசிப்போம்" (மத். 27 : 42) என்றனர். பிரியமான சகோதரனே சகோதரியே சோர்ந்து போகாதே "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்து விடு, அவர் உன்னை ஆதரிப்பார் ; நீதிமானை ஒரு போதும் தள்ளாட வொட்டார்" (சங்.55 : 22). நம்முடைய தேவன் நம்முடைய பாரத்தை எல்லாம் ஏற்றுக் கொள்ளுகிறவர் அது மட்டுமல்ல அவர் ஆதரிப்பவருங்கூட அவரிடம் உங்கள் காரியங்களையெல்லாம் தெரியப்படுத்துங்கள். "வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத். 11 : 28) என்று சொல்லும் ஆண்டவர் இயேசுவிடம் உங்களுடைய பாரத்தை இறக்கி விட்டு இளைப்பாறுங்கள். மனிதனால் கூடாதவைகள் தேவனால் கூடும்.

விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமோடு நாமும் சேர்ந்து ஆசீர்வதிக்கப்பட அவரைப் போல் 'யேகோவாயீரே' என்ற நம்பிக்கையோடு ஒவ்வொரு நாளும் விசுவாச வீரர்களாய் வெற்றி நடைபோடுவோம். "விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசா.28 : 16).

# சமயப்பிழை கண்டிக்கப்படத்தக்கவை

# Religious Error must be condemned

- J.C. Choate



உலகில் இன்று பல சமயங்களினிடையே, பரலோகத்தையடைய வேறுபட்ட வழிகள் உண்டென கூறுகின்ற பலர் உள்ளனர். அவை உண்மையென்றால், அது சிறப்புடையதாக இரா தோ? எல்லா சமய மக்களும் காப்பாற்றப்படுவார்கள் என நாம் சொல்லலாமே. ஆனால், உண்மையிலே, நாம் அவ்வாறு சொல்ல முடியாது. ஏன்? ஏனென்றால் பரலோகத்தில் ஒரே தேவனும், நாம் இரட்சிக்கப் படும் படிக்கு நமக்காக மரித்த ஒரே இரட்சகரும் உண்டு. அந்த ஒருவர் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும், மேலும் அவரால் உலகத்திற்குக் கொண்டு வரப்பட்ட ஒரு மெய்யான மார்க்கமாகிய கிறிஸ்தவமுமேயாகும்.

ஆனால் பொறுங்கள்! கிறிஸ்தவத்திலும் கூட கர்த்தரைப் பின்பற்றுகிறோம் என் உரிமை பாராட்டுகிற பல்வேறு குழுக்கள் அல்லது சபைகள் உள்ளன. இந்த குழுக்கள் எல்லா நற்காரியங்களையும் செய்கின்றனர் என்றும், தங்களுடைய உண்மையில் நிலைத்திருக்கிறார்கள் என்றும், தியாக பலியும் அவர்களுடைய விருப்பம் பரலோகத்திற்கு செல்ல வேண்டும் என்றும் இருப்பதாக சிலர் குறிப்பிடுகின்றனர். ஆனால் நாம் கிறிஸ்துவின் நாட்களுக்குத் திரும்பி, அவர் தமக்கு முன்னிருந்த ஜனங்களின் மத்தியிலிருந்த மார்க்க பேதங்களையும், முரண்பாடான கோட்பாடுகளையும், கள்ளப் போதகங்களையும் எவ்வாறு கடிந்து கொண்டார் என்பதை பார்க்க வேண்டியது அவசியம். அவருடைய நாட்களில் இருந்த எல்லா மார்க்கத்தாரோடும் ஐக்கியம் கொண்டாரா, அவர்களை மெச்சினாரா, அவர்களுடைய மார்க்க செயல்பாடுகளில் அவர்களை உற்சாகப்படுத்தினாரா? நீங்கள் அறிவீர்கள், அவர் அவ்வாறு செய்யவில்லை என்று, மாறாக, அவர் நேரடியாகவே அவர்களுடைய பிழைகளை சாடி அவர்களுடைய போதனைகளைக் கண்டித்தார். நீங்கள் நம்பவில்லையென்றால் மத்தேயு 23ஐ வாசித்துப் பாருங்கள். இயேசு கூறினார், "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாத படி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம் பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதனிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள். மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு, ஐயோ, ஒருவனை உங்கள்

மார்க்கத்தானாக்குபடி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்" (மத்.23 : 13-15). மீண்டும் கிறிஸ்து "ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக் கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள்" (மத்.24:5) என்றார். அவைகள் போதவில்லையென்றால் நம்முடைய கர்த்தரால் கூறப்பட்ட இந்த வசனங்களைக் கவனியுங்கள் : "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்.7: 21-23). இப்போது கர்த்தர் ஏன் இந்த ஜனங்களைக் குறித்து இவ்வார்த்தைகளைச் சொன்னார்? அவர்கள் பக்தியுள்ளவர்களும் உண்மையுள்ளவர்களுமாய் இருக்கவில்லையா? அவர்கள் தேவனுடைய சித்தத்தை செய்ய விரும்பவில்லையா? ஆம், ஆனால் அவர்கள் தவறானவர்கள் மேலும் அவர்கள் அவர்களைப் பின்பற்றுகிறவர்களை ஏமாற்றிக் கொண்டும் வழிவிலகச் செய்து கொண்டும் இருந்தார்கள். கர்த்தர் இதை அங்கீகரிக்கவில்லை. ஆனபடியால் அவர் அவர்களைக் கண்டித்தார்.

பவுல் எவ்வாறு தன்னுடைய நாட்களிலிருந்த கள்ளப் போதகர்களைக் கடிந்து கொண்டான்? அவன் அவர்களோடு ஒத்துப் போனானா, அவர்களை ஏற்றுக் கொண்டானா? அவர்களுடைய போதனையை நியாயப்படுத்தினானா அல்லது என்ன செய்தான்? பவுல் கலாத்தியருக்கு, "உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்" (கலா.1:6-9) என்றான். கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு, அவன், "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர் களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரி. 1 : 10) என எடுத்துக் கூறினான். அவன் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு, "அன்றியும், சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும்,

**இருவழிப்பாடம் 28 ன் விடைகள்**

**பகுதி 3 : 1.A, 2.C, 3.C, 4.C, 5.C**

இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ் செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோம. 16: 17, 18) என்று எழுதினான்.

இப்போது கிறிஸ்துவும், பவுலும் மேலும் மற்ற அப்போஸ்தலரும் விசுவாச மிகுந்த கிறிஸ்தவர்களும் தங்களுடைய நாட்களிலே குற்றம் கண்டுபிடிப்பதிலும் தவறில் கண்டனம் செய்வதிலும் மகிழ்ச்சியடைந்தனரா? அவர்கள் உங்களுடைய மனநிலையைக் காட்டிலும் பரிசுத்தமுடையவராய் இருந்தார்களா? அவர்கள் யாரையாவது சரி செய்யவும் குற்றப்படுத்தவுமே சுற்றி திரிந்து கொண்டிருந்தார்களா? இல்லை, அவர்கள் மனுஷருடைய ஆத்துமாக்களை நேசித்தார்கள். கிறிஸ்து உலகத்தின் பாவங்களுக்காக மரித்தார், பவுல் கிறிஸ்துவின் உபதேசத்தின் மேல் கொண்ட வைராக்கியத்திற்காக மரித்தார், ஆகவே அவர்களுடைய அன்பு பெரியது - ஆனால் அதே சமயம் மனிதன் பாவத்திலும், தவறிலும், கள்ள உபதேசத்தைப் போதிப்பதிலும் இரட்சிக்கப்பட முடியாது என்பதை அறிந்திருந்தனர். தவறான உபதேசத்தைப் பின்பற்றுதல் அவர்களை இரட்சிக்காது, இது வஞ்சிக்கப்பட்டவர்களை அல்லது தவறாக வழி நடத்தப்பட்டவர்களை இரட்சிக்காது.

இதைப் போலவே இன்று, பல சமயத்தவர் உலகில் உண்டு, இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று உரிமை பாராட்டுகிறவர்களும் உண்டு. சந்தேகமில்லை, அவர்கள் நல்லவர்களே; அவர்கள் தங்களுடைய வாழ்வை கர்த்தருக்கு அர்ப்பணித்திருக்கின்றனர்; அவர்கள் கடினமான உழைப்பாளிகள்; ஆனால் அவர்கள் தேவனுடைய வசனத்தில் எங்கும் காணப்படாத காரியங்களை விசுவாசித்து அவைகளை நடைமுறைப்படுத்துகின்றனர். அவைகள் விசுவாசத்தினால் மட்டும் அவர்கள் இரட்சிக்கப்பட முடியும், ஒரு சபை இன்னொன்றைப் போலவே நன்றாக உள்ளது, கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருக்க வேண்டியது முக்கியமல்ல, நீங்கள் நேர்மையும், உண்மையும் போதும் என்ற குறிப்பிட்டவற்றில் மட்டும் கொண்டுள்ள விசுவாசத்தைக் குறித்தும் கவலையில்லை, போன்ற பல.. பல... பல. எல்லா சமயக் கருத்துக்களிலும் தேவனே அதிகாரி என்பதையும், மனிதனுடைய தேர்ந்தெடுத்தல் கீழ்ப்படிதல் மட்டுமே என்பதையும் அவர்கள் மறந்து விடுகின்றனர். எனவே, அவர்களுடைய கீழ்ப்படியாமையையும், தங்களுடைய சுயகோட்பாடுகளை உருவாக்குவதிலும் தங்களுடைய சுய சபைகளை ஸ்தாபிப்பதிலும் அவர்களுடைய

ஊகத்தினையும் கண்டும் காணாமல் விட்டு விடுவோமா? அவர்களை தேவனுடைய பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டு அவர்களோடு ஒருமித்து வேலை செய்வோமா? நம்மால் அதைச் செய்ய முடியுமா? நான் அறிவேன். கள்ளப் போதகங்களைச் சுட்டிக் காட்டுவதில் நாம் சோர்வடைகிறோம் மேலும் நாம் மட்டுமே பரலோகத்திற்குச் செல்லுகின்ற கூட்டத்தார் என நினைக்கிற அந்த சமய வெறியர்கள் நாம் என குற்றஞ் சாட்டுகிறவர்களால் நம்மை நாமே கண்டனத்துக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் நம்முடைய கர்த்தர் தம்முடைய வசனத்தில் குறிப்பிட்டுள்ள சத்தியத்தை அறிவிக்க மறுப்பதின் மூலம் அவரை வஞ்சிக்க முடியாது. அவர் தாமே பாடுபட்டு மரித்தார் ஏனென்றால் அவர் அந்த சத்தியத்தை விட்டுக் கொடுக்க மாட்டார். அப்போஸ்தலர்கள் வழிகுறுகலானது என பிரசங்கித்தார்கள், அவர்களும் கூட சத்தியத்திற்காக உறுதியுடன் நிலைத்திருந்ததற்காக மரித்தார்கள். தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் மற்ற விசுவாசமிக்க கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள், சத்தியத்தைக் குறித்து பேசியதற்கு மரண தண்டனைக்குட் படுத்தப்பட்டார்கள், ஆனால் அதற்கான பரிகாரம் எதிரியோடு இணைய முடியாதது. அவை நம்மை அல்லது அவர்களை இரட்சிக்காது. நாம் அனைவரும் இரட்சிக்கப்பட ஒரே ஒரு வழி, - அது, தேவனுடைய கிருபையின் மூலம் .... அதாவது கர்த்தருக்குக் கீழ்ப்படியவும், நாம் சொல்லுகின்ற செய்கின்ற எல்லாவற்றிலும் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதேயாகும்.



## வேத அறிவுப்போட்டி எண் 35ல் வெற்றிபெற்றவர்கள்

1. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
2. S. செல்லமணி ஆறுமுகம் -Y. ஒத்தக்கடை
3. D. சமாதானராஜா - செட்டிபாளையம்
4. V. சரவணகுமார் - கோவை
5. P. காளியம்மாள் - திருமலைபாளையம்
6. V. கோவலன் - மதுரை
7. Mrs. பரிமளாபிரசாத் - மதுரை
8. Mrs. லலிதாபிரேமகுமாரி - மதுரை
9. S. ராஜபிரசாத் - மதுரை
10. J.S. நிர்மலாஜான் - மதுரை
11. A. சேக்ஸ்பியர் - சிலுவத்தூர்
12. A. ராபர்ட் கிளைவ் - சிலுவத்தூர்
13. Mrs. குளோரிபவுல்சர் - சென்னை
14. A. சேவியர்மேரி - மதுரை
15. T. ஜான்பாலன்கென்னடி - தூத்துக்குடி
16. N. ஜேம்ஸ் - செட்டிபாளையம்
17. Ira. எதிராசன் - சங்ககிரி
18. M. சத்தியவாசகன் - சேலம்
19. P. டேவிட் - சென்னை
20. R. வேலுச்சாமி - ஊதியூர்
21. S. தண்டபானி - சிலுவத்தூர்
22. S.R. பெரியசாமி -சேளூர்
23. Mrs. கிரேஸ்லூயிஸ் - நிலக்கோட்டை
24. S. ஆனந்தராஜ் - ஈரோடு
25. Mrs. ஜெயம்மாள் -M. பிடாரியூர்
26. G. மெர்ஸிரூபி - கொடுவாய்
27. R. கலாவதிராஜா- கோபாலபுரம்
28. J. சாமுவேல்ராஜன் - கொடைரோடு
29. K. ப்ரஜிதா- ஈரோடு
30. A. ஜோதிகாந்தம் - பாண்டியநல்லூர்
31. Mrs.சௌதாமினி - சங்ககிரி
32. Mrs. ஜாஸ்மின்வின்செட்ராஜ் - மதுரை
33. J. ஸ்டெல்லா - தட்டாரவளசு
34. K.M.சுரேஷ் - கொடுவாய்
35. R. பிளசன்- ஜேம்ஸ்டவுன்
36. P. ஜெயராணி - நாகர்கோவில்
37. N.கஸ்தூரிகிறிஸ்டி - திருவண்ணாமலை
38. L. மனாசேமன்னு - சித்தூர் (A.P.)

# சந்திப்போம்-சிந்திப்போம்

உரையாடல் – 10

D. எபிநேசர்

> வாசகர் கவனத்திற்கு,
>
> ஏப்ரல் & மே மாதம் சந்திப்போம் - சிந்திப்போம் ஒரே உரையாடலே அச்சாகி விட்டது. அதற்காக வருந்துகிறோம். இந்த 10வது உரையாடலை மே மாதத்திற்காக ஏற்றுக் கொள்ளுங்கள்.
>
> *- ஆசிரியர்*

***தாவீது*** :அழகான 'ஏதேன்'ங்கற தோட்டம், அதைச் சுற்றி யோடும் நான்கு விதமான நதிகள், குளிர்ச்சியான காற்று, சுத்தமான குடிநீர், உண்பதற்கு சகல விதமான கனிகள், நோயற்ற பிரச்சினைகளற்ற சுகமான வாழ்க்கை எல்லாத்துக்கும் மேல மனிதன் தன்னோட உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு அருமை யான வாழ்க்கைத் துணைவி. இதைவிட ஒரு மனிதனுக்கு வேற என்ன வேணும்?

***யோனத்தான்*** :அருமையான Luxury வாழ்க்கையத்தாம்பா குடுத்திருக்காரு!

***தாவீது*** :ஆனா அந்த வாழ்க்கைய த்க்க வச்சுக்கலியே!

***யோனத்தான்*** :என்ன நடந்திடுச்சு?

***தாவீது*** :தோட்டத்து நடுவுல நன்மை தீமை அறியத்தக்க கனிமரம் ஒண்ணு இருந்துச்சு. அந்தக் கனியச் சாப்பிட வேண்டாம்னு சொல்லி யிருந்தாரு. ஆனா, இந்தச் சதிகாரப்பாவி சாத்தான் ஏவாளை தந்திரமா ஏமாத்தி அந்தக் கனியச் சாப்பிட வச்சுட்டான். அந்தம்மா சாப்பிட்டதோட விட்டுச்சா அதைக் கொண்டு போய் ஆதாமுக்கும் குடுத்துருச்சு!

***யோனத்தான்*** :தேவன் எதுக்கு அதுக்குள்ள கொண்டு போய் அந்த மரத்த வச்சாரு At least ஒரு வேலியாவது போட்டிருக்கலாமில்லே.

***தாவீது*** :வேலி தான் போட்டிருந்தாருல்ல. அவரோட கட்டளை தான் வேலி. தோட்டத்து நடுவுல இருக்க நன்மை தீமை அறியத்தக்க கனியைச் சாப்பிடாதீங்க. மீறிச் சாப்பிட்டா செத்துப் போயிருவீங்கன்னு எச்சரிக்கை பண்ணியிருந்தாரே. நமக்கும் தேவனுடைய கட்டளை தான் வேலி அதை மீறினோம்னா பாவத்துல விழுந்துருவோம்.

***யோனத்தான்*** :அப்புறம் என்ன நடந்திச்சு?

***தாவீது*** :தேவனுக்கு வந்துதே கோபம்! சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் சாபத்தை குடுத்து, ஆதாமையும் ஏவாளையும் அந்த ஏதேன் தோட்டத்தை விட்டே விரட்டி விட்டுட்டாரு. இப்ப ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் போச்சு. சரீரப்பிரகாரமான ஆசீர்வாதமும் போச்சு.

***யோனத்தான்*** :உண்மையிலேயே இது சோகக்கதை தாம்பா. கேக்றதுக்கே ரொம்ப கஷ்டமா இருக்கு. மனசை என்னவோ பண்ணுது. இன்னைக்கு இது போதும். மறுபடியும் இதப்பத்தி பேசுவோம். வரட்டுமா!

(மீண்டும் சந்திப்போம்)

பெண்கள் பகுதி

# நகைத்த ஸ்திரீ

## The woman who laughed



– குளோரி அர்ஜுனன்

சாராள் ஒரு அழகுள்ள ஸ்திரீ. பேதுரு, "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது" என 1 பேதுரு. 3: 4ல் விளக்குகிறான். ஆபிரகாமின் மனைவியாகிய சாராள் ஆவிக்குரிய இந்த அலங்காரத்தைப் பெற்றிருந்தாள். இத்தோடு சரீரப்பிரகாரமாகவும், அழகுள்ளவளாக சிருஷ்டிக்கப்பட்ட இவள் தன் கணவனை "ஆண்டவன்" என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். (1 பேதுரு. 3: 6).

"சாராய் " என்று அழைக்கப்பட்ட இவள் பிறகு "சாராள்" என்று அழைக்கப்பட்டாள். 'சாராள்' என்றால் 'இளவரசி' என்று அர்த்தமாம். மாம்சத்திலும், ஆவியிலும் அழகே உருவான இவளிடமிருந்த சில நற்குணங்களை ஆராய்வோமே!

(1) சாராள் திடமனதுடையவளாயிருந்தாள். ஆம், ஆதியாகமம் 12 : 1-5ஐ வாசிக்கும் போது, கர்த்தர் ஆபிரகாமை நோக்கி : நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ உன்னைப் பெரிய ஜாதியாக்குவேன் என்றார். ஆபிரகாமும், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து தன் மனைவியாகிய சாராயைக் கூட்டிக் கொண்டு கானான் தேசத்திற்குச் சென்றான் என வாசிக்கிறோம். பாருங்கள் அழகே உருவான சாராய் தன் தேசத்தையும், தன் இனத்தையும் மற்ற யாவற்றையும் விட்டு எப்படி காணாத தேசத்திற்குச் செல்லுவது, எல்லா வசதிகளும் அங்கு இருக்குமா? கஷ்டமின்றி சுகபோகமாக வாழ முடியுமா? என்றெல்லாம் பல கேள்விகளை எழுப்பவுமில்லை, வர முடியாது என மறுத்துக் கூறவுமில்லை. என்ன அருமையான கீழ்ப்படிதல்! தன் புருஷன் என்ன கூறினாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்வேன் என்றல்லவா அவனைப் பின் தொடர்ந்தாள். அன்பான சகோதரிகளே, அவளிடமிருந்த சாந்தமும் அமைதலுள்ள உள்ள ஆவிக்குரிய அழகே அவளை இவ்விதமாய் நடக்கச் செய்துள்ளது.

(2) சாராள் தன் கணவன் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் என 1 பேதுரு. 3: 6ல் வாசிக்கிறோம். இன்றைய நாட்களில் கணவனை பெயர் சொல்லி அழைப்பது தான் நாகரிகம்

எனக் கூறுகிறீர்களா? 'ஆண்டவன்' என்றால் 'ஆண்டு கொள்ளக் கூடியவன்', 'தலைவன்' என்று அர்த்தம். ஆம், கிறிஸ்து புருஷனுக்கு தலையாயிருக்கிறார், ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறானென்று வேதம் கூறுகிறது (1 கொரி. 11:3). அப்படியிருக்க, கிறிஸ்தவ சகோதரிகள் தேவனுக்கு ஏற்கும் படிக்கு புருஷனுக்குக் கீழ்ப்படிந்து புருஷனை தனக்குத் தலைவனாகக் கொண்டிருக்க வேண்டும். இதுவே தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலின் அழகு ஆகும்.

(3) குறைவுகளை தன் புருஷனோடு கூட சந்தோஷமாய் சந்தித்தாள்: ஆதியாகமம் 12 : 10-20ல் வாசிக்கையில், தேசத்திலே பஞ்சம் கொடியதாயிருந்த தினால் எகிப்துக்குச் செல்லுகின்றனர். ஐயோ, கர்த்தர் கூறினாரென்று செழுமையான தன் தேசத்தை விட்டு புறப்பட்டு இப்போது பஞ்சத்தை அனுபவிக்கிறோமோ, என்று தன் புருஷனை தூஷித்தாளா? யோபின் மனைவியைப் பற்றி அறிந்திருப்பீர்கள். தனக்கு நஷ்டம் வந்ததும், 'தேவனை தூஷித்து ஜீவனை விடும்' என்று தன் புருஷனைப் பார்த்துக் கூறினாள். அன்பான சகோதரியே, நீங்கள் இப்படிப்பட்ட கஷ்டமான நேரங்களில் உங்கள் கணவனை குறைவாகப் பேசியுள்ளீர்களா? பாருங்கள், இந்த சாராள் எவ்விதத்திலும் முறுமுறுக்கவில்லை, தன் புருஷனின் மனதை கர்த்தருக்கு விரோதமாகச் சாயப்பண்ணி பழைய நிலைக்கு திரும்ப பண்ணவுமில்லை'.

இத்தகைய நற்பண்புகளைப் பெற்றிருந்த சாராளை தேவன் ஆசீர்வதிக்க சித்தங் கொண்டு, "நான் அவளை ஆசீர்வதித்து? அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் என்றார்." (ஆதி. 17 : 14). இதைக்கேட்ட இருவருமே நகைத்தார்கள். ஆனால் தேவன் தமது திட்டத்தின்படி சாராள் கர்ப்பந்தரிக்க பெலனடையும் படி செய்தார். அவள் வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள். அவனுக்கு 'ஈசாக்கு' என பெயரிட்டார்கள். 'ஈசாக்கு' என்றால் 'நகைப்பு' என அர்த்தம். சாராள் தான் வயது சென்றவளாயிருக்கும் போது எப்படி இது சாத்தியப்படும் என நினைத்து நகைத்திருக்கக் கூடும். ஆனால், "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" எனக் கூறி கர்த்தர் தமது திட்டத்தை நிறைவேற்றினார்.

அன்பு சகோதரிகளே, உங்களை குறித்து தேவன் ஒரு திட்டம் கொண்டுள்ளார். அவருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். நாம் செய்ய வேண்டியதெல்லாம் சாராளைப் போல் சாந்தமும் அமைதலுமுள்ள உள்ளான அழகைப் பெற்று தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்களாய் இருக்க முயற்சிப்பதேயாகும். நாம் நினைப்பதற்கும் வேண்டிக் கொள்ளுவதற்கும் மேலாக தேவன் நமக்குச் செய்ய வல்லவராயிருக்கிறார். நம்முடைய நகைப்பு அவிசுவாசத்தைப் பிரதிபலிப்பதாக இல்லாமல் விசுவாசத்தை பிரதிபலிப்பதாக இருக்கட்டும். கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக!.

# மழை
# Rain

Betty Burton Choate

ஓ தேவனே, நிலம் வறண்டும் கடினமாயுமுள்ளது

மழையில்லாததால்;

உஷ்ணம், பலத்த காற்று

பற்றிக் கொள்கிறது மரங்களையும் பூக்களையும்

அழிவுக்கேதுவான அமைதியில்

அவைகள் வாடி,

வதங்குகின்றன,

வளர்ந்து, காய்கின்றன

மழைத் தாழ்ச்சியினால்;

ஆணிவேர் வளருமிடம்

ஆழமாயிருந்தால் கூட

அது வாடியுள்ளது ___

முடிந்த மட்டும்

மனிதனால் ஏற்படுத்தப்பட்டவற்றில் சிறு தூறலில்லை

நாம் ஜெபிப்போம் மழைக்காய்.

காத்திருக்குதல் நெடுநாளாய் தென்படுகிறது,

காத்திருக்கும் பொருட்களின் வாழ்நாளைக் காட்டிலும் ___

கிட்டத்தட்ட நம்பிக்கையின் நாட்களைக் காட்டிலும்

ஓ, தேவனே, கருமேகத்தைக் காண்பது எவ்வளவு மகிழ்ச்சி,

கேட்பதற்கு இடி முழக்கத்தை

தொலைவிலே உருளும் பீப்பாயின் சத்தம் போல,

திடீரென ஏற்படும் மின்னலோடும் மழையின் வாழ்த்தோடும்;
எத்தனை இன்பம் மண் வாசனையின் நறுமணம்
கீழே விழும் நீர்த்துளியாய், தன் சிறு கவியோடு,
காத்திருக்கும் பூமியை ஸ்நானம் செய்கிறது.
எத்தனை இன்பம் அனுபவிப்பது என் முகத்தில்
மற்றும் என் தோலில் தெறிக்கும் துளிகளை,
தன் குளிர்ச்சியின் மிகுதியால் வளர்ந்து விட்ட
ஊக்கமூட்டும் காற்றை சுவாசிக்க
எத்தனை இன்பம் திரும்பவும் காண
மாபெரிதான
மேலும் உம்முடைய கிரியையின்
அழகினை, ஓ, தேவனே,
ஒரேயடியாக கொண்டு வருகின்றீர்
உம்முடைய பூமியின் முடிவில்லா மைல்கள் ஏக்கர் மேல்
அபரிமிதமான நீரை,
புதுப்பிக்கின்றீர் வாழ்வை,
மிக ஆழமாக மரணம் குடி கொண்டிருந்த இடத்திலே,
இது போன்று மனிதனால் ஏற்படுத்தப்பட்டவை
ஒரு போதும் செய்யக் கூடாதது.

- தமிழில் J. குளோரி அர்ஜுனன்

## வேத அறிவுப் போட்டி எண் 35ன் விடைகள்


1. ஒரு மனுபுத்திரனும் - எண். 23 : 19
2. மாயையிலும் - சங். 62 : 9
3. சிலுவையிலே - கொலோ.2 : 15
4. நாசம் பண்ணுவார் - 2 தெச. 2 : 8
5. சஞ்சலம் - யோபு 14 : 1
6. தேவ - 2 கொ.10:4
7. பரிசேயசமயத்தாரான வேதபாரகர் - அப்.23 : 9
8. அழிந்து போகும் - ஏரே.10 : 11
9. மான் கால்களைப் போலாக்கி - ஆபகூ.3:19
10. தன்தன்சுயகிரியையைச் - கலா. 6: 4





# கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட ஓபேத் ஏதோமின் வீடு

வேத பகுதி : 2 சாமுவேல் 6:1–12



தாவீது ராஜா இஸ்ரவேலிலே தெரிந்து கொள்ளப்பட்ட முப்பதினாயிரம் பேரைக் கூட்டிக் கொண்டு தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின் மேல் ஏற்றிக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது அந்த இரதத்தை நடத்தினவர்கள் அபினதாபின் குமாரராகிய ஊசாவும் அகியோவும். அவர்கள் நாகோனின் களத்தண்டை வந்த போது மாடுகள் மிரண்டு பெட்டி அசைந்த போது ஊசா பயமின்றி தேவனுடைய பெட்டியை பிடித்தான். அதனால் கர்த்தர் கோபமூண்டு அவனுடைய துணிவினிமித்தம் அவனை கொன்று போட்டார்.

இதை அறிந்த தாவீது பயந்து போய் தேவனுடைய பெட்டியை தன்னுடைய நகரத்திற்கு கொண்டு வர மனதில்லாமல் கித்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே கொண்டு போய் வைத்தான். கர்த்தருடைய பெட்டி ஓபேத் ஏதோமின் வீட்டிலே மூன்று மாதம் இருக்கையில் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டாரையும் ஆசீர்வதித்தார். தாவீது பயந்தாலும், இந்த ஓபேத் ஏதோம் பயப்படவில்லை. அன்போடு ஏற்று பயபக்தியாய் இருந்திருக்கக் கூடும். பாருங்கள் ஊசாவின் வீட்டிலிருக்கும் போது ஊசாவும் அவன் சகோதரன் அகியோவும் பயந்திருக்கக் கூடும். ஆனால் புது இரதத்தில் ஏற்றி வரும் போது அந்த பயபக்தி இல்லாமற் போகவே ஊசா அங்கு கொல்லப்படுகிறான்.

இதை அறிந்த அல்லது கேள்விப்பட்ட ஓபேத்ஏதோம் கொஞ்சமும் பயப்படாமல் ராஜாவின் சொல்படி தேவனுடைய பெட்டி தனது இல்லத்தில் இருக்க இடம் கொடுத்தான். அதனால் பாருங்கள் அவனும் அவன் குடும்பமும் ஆசீர்வதிக்கப்பட்டது. இன்று நீங்களும் நானும் வேதாகமம் அதாவது புது உடன்படிக்கை நிறைந்த புத்தகம் இருதயத்தில் இருக்க இடம் கொடுக்கும் போது ஓபேத்ஏதோம் வீட்டாரைப் போல நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம். இயேசுவை ஏற்றுக் கொண்ட சகேயுவைப் பார்த்து இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்று சொல்வது போல நமக்கும் நம் குடும்பத்திற்கும் ஆசீர்வாதம் வரும். இன்றே ஏற்றுக்

கொள்வீர்களா? ஓபேத் ஏதோமைப் போல பயப்படாமல் தேவனுடைய வார்த்தை நிறைந்த வேதாகமத்தை ஏற்று அதற்குரிய கனத்தை செலுத்துங்கள் அப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**மனப்பாட வசனம்**

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப்போஸ்தலர் 16: 31)

## *ஏரேமியாவின் புலம்பல்* — பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் — *THE LAMENTATIONS*

**பொருள்** : எருசலேமின் பயங்கரமான வீழ்ச்சியைக் குறித்த துயரமான புலம்பல்கள்

**ஆக்கியோன்:** எரேமியா எனக் கருதப்படுகிறது

**காலம்** : 586 கி.மு.

**திட்டவரைக் குறிப்பு** :

★ பாவத்தின் கொடூரமான விலையை எண்ணி தனக்கு உண்டாயிருந்த இன்பமானவைகளை நினைத்து புலம்பல் பெருமூச்சு விட்டு அழுகிற (அதி.1).

★ தண்டிக்கிறவர் கர்த்தர் ஒருவரே (அதி. 2)

★ துயரத்தின் மத்தியிலே உதவிக்காக ஒரு தனிப்பட்ட நம்பிக்கை (அதி. 3)

★ பாவத்தினால் ஏற்பட்ட துயரத்தின் ஒரு வர்ணனை (அதி.4)

★ தேவன் உதவும்படிக்கு ஒரு விண்ணப்பம் (அதி.5)

**சிறப்புச் செய்தி :**

கர்த்தர் தாம் நினைத்ததைச் செய்தார். பூர்வ நாட்கள் முதற் கொண்டு தாம் கட்டளையிட்ட தமது வார்த்தையை நிறைவேற்றினார்.

**வரலாற்று பின்னணி :**

எருசலேம் தன்னுடைய விக்கிரக ஆராதனையிலிருந்து (தேவனைப் புறக்கணித்தல்) மனந்திரும்ப மறுத்ததன் காரணமாக அடைந்த வீழ்ச்சியைக் குறித்து, தீர்க்கதரிசியாகிய எரேமியா அனுபவித்த மிகுதியான துயரத்தை வெளிப்படுத்துதல்.

**ஒரு வழி**

# தேவனுக்கு அர்ப்பணம்
# COMMITMENT TO GOD




"**அ**ர்ப்பணம்" என்ற வார்த்தையானது அநேக ஜனங்களைப் பயமுறுத்துகிறது ஏனென்றால் அவர்கள் தாங்கள் கொடுக்கின்றதைக் காட்டிலும் தேவன் தங்களிடம் அதிகம் எதிர்பார்க்கிறார் என கருதுகின்றனர். ஆனால் தேவனுக்கு அர்ப்பணம் என்பது உங்களை பயப்படுத்தாது. நீங்கள் தேவனில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பலத்தோடும் அன்பு கூர்ந்தால் இது உங்களைப் பயமுறுத்தாது (மாற்.12 : 30). நீங்கள் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தால் இயேசுவுக்காக கிரியையிலே காண்பிக்கும்படிக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

இயேசுவின் வார்த்தையை நினைவுகூருங்கள். "**பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே** பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" (மத்.7 : 21). நீங்கள் இயேசுவினிடத்தில் அன்பு கூருவீர்களென்றால் நீங்கள் உங்களுடைய சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றுவீர்கள் (லூக்.9:23).

தேவன் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். இயேசு **தமக்குக் கீழ்ப்படிகிறவர் களுக்கு மட்டும்,** நித்திய இரட்சிப்பின் காரணரானார் (எபி.5:8, 9). நாம் அவரை நேசித்தோமனானால், **நாம் அவருடைய கற்பனைகளைக் கைக் கொள்வோம்** (யோவா. 14 : 15; 1 யோவா. 5 : 3). ஏனென்றால் தேவனிடத்தில் அதிகமாய் அன்பு கூர்ந்து இயேசுவின் கற்பனைகளைக்கைக்கொள்ளும் படிக்குக் கிரியை நடப்பிக்கின்றவர் களுக்காக பரலோகமானது ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கின்றீர்களா?

நீங்கள் உங்களுடைய வாழ்வை இயேசுவுக்கென்று ஒப்படைக்க வேண்டும். நீங்கள் உங்களையே முழு நம்பிக்கையாக தேவனிடத்தில் அர்ப்பணிக்க வேண்டும். தேவன் உங்களை நேசிக்கிறார் நீங்கள் கெட்டு போகும்படி விரும்பவில்லை (2 பேது. 3:9) இப்படியாக அவர் நீதியுள்ள தேவனாயிருக்கிறார். மாறாக, முரட்டாட்டமுள்ள ஜீவியத்தின் மூலம் தம்மை தூஷிக்கிறவர்களை அவர் ஆசீர்வதிக்க மாட்டார். இயேசு, "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். **மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்"**

(மத்.10:32,33) என்றார். தேவ பக்தியற்ற ஜீவியத்தின் மூலம் தம்மை மறுதலிக்கிறவர்களுக்கு இயேசு நித்திய இரட்சிப்பின் காரணராயில்லை. அவர் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு மட்டுமே நித்திய இளைப்பாறுதலை அருளுவார்.

நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருப்பீர்களென்றால், **நீங்கள் இயேசுவின் இரத்தத்தோடே ஐக்கியமாகும் பொருட்டு கிறிஸ்துவுக்குள் உங்களை ஞானஸ்நானப்படுத்தும் படிக்கு யாராவது ஒருவரை கண்டுபிடியுங்கள்.** அதன்பின், புறப்பட்டுப் போய், நீங்கள் செய்தது என்னவென்று மற்றவர்களுக்குச் சொல்லுங்கள். சிலுவையில் வெளிப்பட்ட தேவனுடைய கிருபையையும் கிறிஸ்துவுக்குள்ளாக நீங்கள் விடுதலையாக்கப்பட்டிருப்பதையும் பற்றி அவர்களிடத்தில் பேசுங்கள் (கலா.5:1; தீத்.2:11) ஞானஸ்நானத்தில் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்ததின் மூலம் நீங்கள் எவ்வாறு தேவனுடைய கிருபைக்கு ஒப்படைத்தீர்கள் என்பதை அவர்களுக்குச் சொல்லுங்கள் (1 கொரி. 15: 10). உங்களோடு கூட கிறிஸ்துவுக்குள்ளான இந்த புதிய சுயாதீனத்தில் இணைந்து கொள்ளும்படி மற்றவர்களையும் ஊக்கப்படுத்துங்கள். நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் போது பவுல் தன்னுடைய ஜீவியத்தைக் குறித்து என்ன கூறினான் என்பதை நீங்கள் மற்றவர்களுக்குக் கூறலாம். "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்." (கலா. 2: 20).

அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிப்பதின் விளைவு துன்பத்தைக் கொண்டு வருவதாக இருக்கும். நீங்கள் மனுஷர் உருவாக்கும் பாரம்பரிய மதக் கோட்பாடுகளினால் கட்டப்படாமல் தேவனுடைய வசனத்தை மட்டும் பின்பற்றுவதற்கு நீங்கள் தீர்மானித்திருப்பதினால் பல மத வைராக்கியமுள்ள ஜனங்கள் உங்களைத் துன்புறுத்துவார்கள்.

தேவனுக்குக் கீழ்ப்படிய மறுக்கிறவர்கள், தங்களுடைய வழிகள் தேவனுடைய வார்த்தைக்கு புறம்பாயிருந்து, உங்களுடைய் நீதியுள்ள மாதிரி ஒரு ஜீவனுள்ள நிருபமாயிருப்பதினால் உங்களை எந்த வழியிலும் துன்புறுத்துவார்கள். ஆனபடியினால், நீங்கள் இயேசுவுக்காக வாழத் தீர்மானிக்கிறவர்களாயிருக்க வேண்டும். பவுல் தீமோத்தேயுக்கு என்ன கூறினார் என்பதை நினைவு கூருங்கள், **"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்"** (2 தீமோ. 3: 12). நீங்கள் துன்புறுத்தலை அனுபவிப்பீர்கள். எப்படியிருந்த போதிலும் அப்போஸ்தலர்கள் துன்புறுத்தப்பட்ட போது இருந்தபடியே நீங்களும் அவர்களைப் போலிருங்கள்." அவருடைய (இயேசு) நாமத்துக்காக அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால்" நீங்கள் சந்தோஷமாயிருங்கள் (அப்.5:41). வேதாகமம், "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, **அதனிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்** (1 பேது. 4 : 16) என உற்சாகப்படுத்துகிறது. (முற்றிற்று)

# அன்பு கூருதல்

J. David Williams

உலகத்தில் அனேகர் அனேக விதத்தில் அன்பு கூருகின்றனர்.

அன்பு கூருதல் எந்த விதத்திலும் நன்மையானது. நாம் எப்படி அன்பு கூர வேண்டும். யாரிடத்தில் அன்பு கூர வேண்டும் என்று நாம் வேதத்தின் முலம் சற்று தியானிப்போம்.

**1. தேவனிடத்தில் அன்பு கூருதல்:-**

முதலாவது தேவனிடத்தில் அன்பு கூர வேண்டும். ஏனெனில் வானத்திலேயும், பூமியிலேயும் நமக்கு தேவர்கள் எனப்படுபவர்கள் உண்டு. இப்படி அனேக தேவர்களும் அனேக கர்த்தாக்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு. அவராலே சகலமும் உண்டாயிருக்கின்றது. அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கின்றோம். இயேசு கிறிஸ்து எனும் ஒரே கர்த்தரும் நமக்கு உண்டு. அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கின்றது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கின்றோம். எனவே, தான் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துவுக்கு எழுதும் போது தேவனில் அன்பு கூருகிறவன் எவனோ அவன் தேவனால் அறியப்பட்டிருக்கின்றான், என்று 1 கொரி. 8 : 3ல் கூறி இருக்கின்றார். நாம் தேவனில் அன்பு கூரும் போது தேவனால் அறியப்பட்டு இருக்கின்றோம். அது மட்டுமல்ல நாம் அவரில் அன்பு கூர்ந்து அவர் கற்பனைகளை கைக் கொள்ளும் போது 1000 தலைமுறை மட்டும் இரக்கம் செய்கிறவராக இருப்பேன், என தேவன் வாக்குரைத்திருக்கின்றார் (யாத். 2 : 6, உபா 5 : 10).

நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும் முழு பெலத்தோடும் அன்பு கூர வேண்டும். இவைகளை நீங்கள் மறந்து விடாதபடிக்கு உங்கள் இருதயங்களில் எழுதிக் கொள்ளுங்கள் என்று இஸ்ரவேலரை மோசே எச்சரிக்கின்றார். அது மட்டுமல்ல என்னில் அன்பு கூர்ந்து என் கற்பனைகளையெல்லாம் கைக் கொண்டு நன்மையுண்டாகும் படி நடந்து கொள்ளுங்கள், என்பதேயல்லாமல் வேறே எதை நான் உன்னிடத்தில் கேட்கின்றேன் என தேவன் அங்கலாய்த்து கொள்கின்றார் (உபா.6 : 5, 6, 10 : 12, 13). சாலமோன் தேவனிடத்தில் அன்பு கூர்ந்தான். அளவில்லா ஆசீர்வாதம் பெற்றான். சாலமோன் தேவனிடத்தில் பெற்ற ஆசீர்வாதத்திற்கு அளவில்லை. சாலமோனை போல் ஒரு ஞானி அவருக்கு முன்னும் இல்லை. அவருக்கு பின்னும் இல்லை. அவரை போல் உடுத்தினவர் ஒருவரும் இல்லை. ஞானத்திலும், செல்வத்திலும் அவரை போலொத்த ஒருவரும் இல்லை. அவ்வளவாய் தேவன் சாலமோனை தம்மில் அன்பு கூர்ந்தபடியால் ஆசீர்வதித்தார் (1 இரா. 3 : 3 - 12).

மிக பெரிய இராஜாவான தாவீது தன் இராஜ்யபாரத்தை குறித்து மேன்மை பாராட்டாமல், தன் பெலத்தை குறித்து மேன்மை பாராட்டாமல், தன்னை எல்லா சத்துருக்களின் கைகளில் இருந்தும் விடுதலையாக்கின நீதியுள்ள தேவனை நோக்கி

என் பெலனாகிய கர்த்தாவே உம்மில் அன்பு கூருவேன் என்றார் (சங். 18 : 1). தேவன் அவரை சிறுமையிலிருந்து தெரிந்து கொண்டு அவரை இராஜாவாக உயர்த்தி அனேக இடையூறுகளிலிருந்து காத்து நடத்தினபடியால் அவர், தன்னை குறித்து மேன்மை பாராட்டாமல், எல்லாவற்றையும் தந்த தேவனை நோக்கி என் பெலனாகிய கர்த்தாவே உம்மில் அன்பு கூருவேன் என்று அவர் பிரார்த்திக்கும் நன்றியறிதலை பார்க்கும் போது நாமும் தேவனில் அன்பு கூர்ந்தால் இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தால் நம்மை உயர்த்துவது அதிக நிச்சயம் அல்லவா, தாவீது தான் தெரிந்து கொண்ட இந்த உன்னதமான ஆசீர்வாதத்தை பரிசுத்தவான்களின் முன்பாக வைக்கின்றார். கர்த்தருடைய பரிசுத்தவான்களே அவரிடத்தில் அன்பு கூருங்கள் (சங். 31:23). தாவீது தன் தேவைகளையெல்லாம், கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து வேண்டுதலோடு கூடிய விண்ணப்பங்களாய் அவர் முன் வைத்ததினால், எல்லா தேவைகளையும் பெற்று கொண்டார் (சங். 116 : 1). ஆகவே நாம் நம்முடைய தேவனில் அன்பு கூரும் போது, அவர் நம்மை எல்லா சிட்சையிலிருந்தும் விடுதலையாக்கி பரிபூரண ஆசீர்வாதத்தினால் நிரப்பப்பட்டவர்களாக்கி அவருக்கு சொந்தமாக்கி கொள்வார்.

- வளரும்

## தெரிந்து கொள்ளுங்கள்

### ஆனதோத்

-K.R.K. ரவி ஆசீர்

ஆசாரியனாகிய அபியத்தார் மற்றும் எரேமியா தீர்க்கதரிசியின் (1 இரா. 2 : 26; எரே. 1 : 1) சொந்த ஊரான இது எருசலேமுக்கு வடகிழக்கு திசையில் ஏறத்தாழ மூன்று மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது. இதன் பெயர் இன்றும் 'அனத்தா' என்ற சிறிய கிராமத்தில் இருக்கிறது. அகழ்வாராய்ச்சியாளர்கள் இந்த ஊர் ஏறத்தாழ கி.மு. 1000 ஆண்டிலிருந்து இஸ்ரவேலின் ஆசாரிய பட்டணமாக தொடர்ந்து கி.பி. 7 ஆம் நூற்றாண்டு வரை இருந்திருக்கிறது என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். அது எரேமியாவின் ஊர் தானா என்பது இதுவரை நிரூபணமாக கண்டுபிடிக்கப்பட வில்லை. ஆனால் இவ்விடத்திற்குச் சென்றவர்கள் யாவரும் கிழக்கில் யூதேயா வனாந்தரம், சவக்கடல் வரை கண்டு மகிழ்ந்திருக்கிறார்கள்.




கிறிஸ்துவின் வசன மாதஇதழ் வளர்ச்சிக்கு உதவ
முன் வருகிறவர்கள் கவனத்திற்கு
உங்களுடைய உதவியை வங்கி காசோலை மூலமாகவோ அல்லது மணியாடர் மூலமாகவோ THE WORD OF CHRIST என்ற பெயரில் அனுப்பி வைக்கவும். நன்றி.

ஆசிரியர்

Editor
THE WORD OF CHRIST
P.O. Box 5, Batlagundu - 624 202. S. INDIA. ✆ 04543 - 263278

# சந்திப்போம்-சிந்திப்போம்

உரையாடல் – 12

D. எபிநேசர்

*தாவீது* : வாப்பா யோனத்தான்! எங்கப்பா ஆளையே காணோம்! போன மாசம் நம்ம உரையாடல் இல்லாம வாசகர்கள் எப்படி தவிச்சிருப்பாங்க தெரியுமா?

*யோனத்தான்* : அட ஏம்பா நீ வேற. எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. இரட்சிப்பும் வேண்டாம், ஒண்ணும் வேண்டாம்னு தோணுது. அதனால் தான் போன மாசம் உன்னப் பார்க்க வரல. அப்படியே போய்ட்டேன்.

*தாவீது* : திடீர்னு உனக்கு என்னப்பா ஆச்சு?

*யோனத்தான்* : அது வேற ஒண்ணும் இல்லப்பா. நம்ம பக்கத்து வீட்ல ஒரு பிரிவினை சர்ச்சுக்குப் போற ஒருத்தர் இருக்காரு. அவரோட பேசினதால தான் இந்த நெலமைக்கு ஆயிட்டேன்.

*தாவீது* : அப்படி என்னதாம்பா சொன்னாரு?

*யோனத்தான்* : நம்ம அடுத்ததா அறிக்கையிடுதல் பத்தி பேசறதா சொல்லியிருந்தமில்லே.

*தாவீது* : ஆமா

*யோனத்தான்* : என்னைக் கூப்பிட்டு அதுபத்தி பெரிய விளக்கமே குடுத்துட்டாரு. அவருகிட்டேயிருந்து தப்பிச்சு வர்ரதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிருச்சு. அதனால அவரோட விளக்கத்தக்கேட்ட உடனே ஒரு முடிவுக்கு வந்துட்டேன்." இனிமே நமக்கு இரட்சிப்பு கெடைக்கப் போறதில்லே. நடைமுறைக்கு இது சரிப்பட்டு வராது" அப்படீன்னு முடிவு பண்ணிட்டேன்.

*தாவீது* : அப்படி என்னதாம்பா விளக்கம் சொன்னாரு?

*யோனத்தான்* : நீ மட்டுந்தான் சஸ்பென்ஸ் வைப்பியா? நான் வைக்கக் கூடாதா? அவரு என்ன சொன்னாருன்னு அடுத்த தடவை சொல்றேன், இப்ப புறப்படலாமா?

*Bye Bye*

## வேத அறிவுப் போட்டி எண். 36

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.

1. எவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது?
2. உஷ்ண காலத்திலே உறைந்த பனியும், அறுப்புக் காலத்திலே மழையும் தகாதது போல, மூடனுக்கு எது தகாது?
3. அந்நிய தெய்வங்களையும், காதணிகளையும் யாக்கோபு என்ன செய்தான்?
4. ஒரே பேறானவனையே பலியாக ஒப்புக் கொடுத்து, மரித்தோரிலிருந்து அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக் கொண்டவன் யார்?
5. நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே எது?
6. நாலாயிரங் கொலை பாதகரை வனாந்தரத்திற்குக் கொண்டு போன எகிப்தியன் அல்லவா என்று யாரைப் பார்த்து சேனாதிபதி சொன்னான்?
7. அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, எதற்கே பயங்கரமாயிருக்கிறார்கள்?
8. எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு மேன்மை பாராட்டமாட்டோம் என்ற அப்போஸ்தலன் யார்?
9. மோசேக்கு பெயரிட்டது யார்?
10. நசரேய விரதங்காக்கும் மனிதன் தலைமீது எது படலாகாது?

## நடப்புச் செய்திகள்

☆ தமிழகத்தில் ரூ.15 கோடி செலவில் 150 கிராமத்தில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்க இருப்பதாக பொதுப்பணி மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

☆ நாட்டின் ஒருமைப்பாட்டை மேம்படுத்த பொது சிவில் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு கூறி உள்ளது.

☆ தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும் என அரசு உத்திரவிட்டுள்ளது.

☆ அமெரிக்க அரசியலில் இந்தியர்கள் பங்கு பெறுவது அதிகரித்து வருகிறது. 2010-ம் ஆண்டில் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் 10 இந்தியர்கள் எம்.பியாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

☆ இங்கிலாந்து அணியின் விக்கெட் கீப்பர் அலெக் ஸ்டூவர்ட். இவர் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் முடிந்த பிறகு ஓய்வு பெறப் போவதாக அறிவித்து உள்ளார்.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2003-2005. Licensed to post without prepayment
License No. TN/WPP-25/SR/2003-2005. Posted at Batlagundu Post Office on 10th August 2003.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.




கிறிஸ்துவின் சபை

17.2.102-D/5, ராஜன் நகர், வத்தலக்குண்டு–624 202.
திண்டுக்கல் Dt. ✆ : (04543) 263278

குப்பம்மாள்பட்டி – 624 212. கொடைக்கானல் T.K., திண்டுக்கல் Dt.

7. ஆதிவீராச்சாமி நாயக்கர் சந்து, அரண்மனை தெரு, வடகரை
பெரியகுளம்–626 501, தேனி மாவட்டம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 a.m<br>7.00 a.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Wed,Thu | 2.00 p.m<br>2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Mon, Tue,<br>Wed, Thu,<br>Fri | 5.30 p.m<br>5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m<br>4.00 p.m | Box. 5540<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.